




பாவனைக் கலைஞர் எஃப். ஜே. பாக்னர் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்தவர். அண்மையில் சென்னை ம்யூசியம் தியேட்டரில் ஒன்றரை மணி நேரம் ‘மானோ ஆக்டிங்’ நடத்திக் காட்டிய பாக்னர் பார்வையாளர்களை ஆரம்பத்திலிருந்து கடைசி வரை தன் ‘கண்ட்ரோலி’ லேயே வைத்துக் கொண்டிருந்தார்.

ஆரம்பத்தில் விளக்கம் கொடுத்து விட்டு பிறகு மேடையில் 'சாக்பீஸால்' கோடு வரைந்தார். கோட்டுக்கு இந்தப் பக்கம் சாதாரண ஆளாக நின்று கொண்டிருந்தவர் அந்தப் பக்கம் தாண்டியதும் முற்றிலும் மாறுபட்ட நடிகனாகிவிட்டார். லைட்டிங் கண்ட்ரோலை செய்தவரும் பாக்னரே. காலடியில் ஸ்விட்ச்சுகள்!

‘இது ரொம்ப சிம்பிள்’ என்ற தலைப்பில் பல நிகழ்ச்சிகளை செய்தார். அதில் ஒன்று நாற்காலியின் முதுகில் மாட்டப்பட்டிருக்கும் கோட்டை எடுத்து அணிய முயற்சிப்பது. கோட்டை எடுத்தால் நாற்காலியும் கூட வருகிறது. கடைசியில் நாற்காலியில் உள்ள கோட்டுக்குள் தானே புகுந்து கொள்ள முயற்சித்தபோது பாக்னர் ‘ஸ்லாப்ஸ்டிக்’ நகைச்சுவையின் எல்லையையே தொட்டார்.

வெறும் ஸ்லாப்ஸ்டிக் அளவில் பாக்னரின் 'கோமாளித்தனம்' நின்றுவிடவில்லை. நான்கு குச்சிகள் ஒரு பலகையைக் கொண்டு ஒரு நாற்காலி செய்து, பிறகு அதில் உட்கார்ந்தபடியே நாற்காலியின் கால்களை ஒவ்வொன்றாக எடுத்துவிட்டு கடைசியில் அந்தரத்தில் மிதப்பதாக நடித்துக் காட்டியது ஒரு அருமையான அறிவுப்பூர்வமான நிகழ்ச்சி.

பாக்னரின் கிண்டலுக்கு ஆடியன்சும் தப்பவில்லை. ‘இது கடைசி காட்சி’ என்று அறிவித்தபின் அவர் நடித்து முடித்தபிறகு மேடையை விட்டு போகாமல் தன் பொருட்களை ஒழுங்குபடுத்திக்

கொண்டிருந்தார். ஆடியன்ஸ் கலைவதாக இல்லை. “ஓஹோ, இந்தக் கோட்டை அழிக்க மறந்து, விட்டேன்” என்றபடி சாக்பீஸ் கோட்டை அழித்தார். அதன் பிறகும் 15 நிமிட நேரம் நிகழ்ச்சி முடிந்ததா இல்லையா என்ற குழப்பத்தில் ஆடியன்சை உட்கார வைத்தார். "போகும் போது குட்பை சொல்லிவிட்டு போங்கள்" என்றபடி மூட்டை கட்டினார்.

நடுவே படம் எடுக்க வந்த புகைப்படக்காரர்களுக்கு மேடையிலி ருந்தபடியே போஸ் கொடுத்தார். கையில் காமிரா இல்லாமல் பாவனை செய்தபடி 'ஒன் மினிட்' என்று சொல்லிக் கொண்டு பாக்னரை 'க்ளிக்' செய்தார் ஆடியன்சிலிருந்து வந்த ஒருவர். பாக்னரோ அசையாமல் போஸ் கொடுத்தபடி நின்று கொண்டிருந்தார். திடீரென்று வாட்சைப் பார்த்து "30 செகண்ட்தானே ஆகிறது. ஒன்மினிட் கேட்டீர்களே!" என்று பளிச் சென்று ஜோக்கடித்தார் பாக்னர்.

- ஜீனியர் விகடன்
25.01.1984